மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு வழிபாடு மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலங்களில் எல்லாம் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் குறிப்பிட்டதுபோல திருப்போரூர் பகுதியிலும் நடைபெறுகின்ற விழாக் காலங்களிலே சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன; இன்னும் இயக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி, இது திருப்போரூர், திருப்பூர் இல்லை.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகரமான திருப்பூர் நகரில் அதிகமான......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. வினா எண் 150, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

150—

போக்குவரத்துக் கிளைக் கழகம்

***7859**—டாக்டர் பி. வள்ளல் பெருமான் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் வட்டத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகக் கிளை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) கொள்ளிடக்கரையில் வல்லம்படுகையிலிருந்து (சிதம்பரம்) அணைக்கரை (கீழ் அணை) வரையில் அரசுப் பேருந்து இயக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

2002 ஏப்ரல் 17]

(ஆ) காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகக் கிளை ஆரம்பிக்க போதிய நிதி ஆதாரமும், தகுந்த நிலமும் கிடைக்கப்பெற்றபின்தான் தொடங்க இயலும்.

(இ) கொள்ளிடக்கரையில் வல்லம்படுகையிலிருந்து சிதம்பரம் அணைக்கரை (கீழ் அணை) வரையில் அரசுப் பேருந்து விடும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார் கோயில் வட்டம், கடலூர் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். பல நூற்றுக்கணக்கான கிராமங்கள், உட்கிராமங்கள் உள்ள பகுதியாகும். காட்டுமன்னார் கோயில் நகரத்தின் அருகிலே தஞ்சை, திருச்சி, பெரம்பலூர் மாவட்டப் பகுதிகள் அமைந்துள்ளன. தற்சமயம் கும்பகோணத்திலிருந்து இரண்டு பேருந்துகளும், சென்னையிலிருந்து இரண்டு பேருந்துகளும், காட்டுமன்னார் கோயில் பகுதியைச் சுற்றி 20 பேருந்துகளுமாக 24 பேருந்துகள் இயங்கி வருகின்றன. அவற்றை உள்ளடக்கி ஒரு பேருந்து கிளைக் கழகத்தைத் தொடங்கினால் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் பயனுடையதாக இருக்கும். 6 ஆண்டுகளுக்கு முன்பாக அரசு அதிகாரிகள் வந்து நேரிலே பார்த்து இடத்தை கையகப்படுத்துவதற்கான முயற்சி செய்தார்கள். அதை ஏனோ அவர்கள் கைவிட்டு விட்டார்கள். அதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மீண்டும் மறுபரிசீலனை செய்து அங்கு புதிதாக பஸ் டெப்போ தொடங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அதைப்போல கொள்ளிடக் கரையிலிருந்து கீழ் அணைப் பகுதி கொள்ளிடத்தினுடைய வட கரையிலே கொள்ளிடத்திலிருந்து சிதம்பரம் வட்டம் வல்லம்படுகை இணைக்கின்ற சாலை 20 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இந்தச் சாலையிலே இப்போது சாலையை அகலப்படுத்தி, தார்ச் சாலைகள் போடுவதற்காக ஏற்பாடு செய்து வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கொள்ளிடக் கரையினுடைய வட கரையிலே சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அங்கே 4 உயர்நிலைப் பள்ளிகளும் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. எனவே, விவசாயிகளும், கல்லூரி மாணவர்களும் பயன்படுத்துகின்ற வகையிலே அரசுப் போக்குவரத்து

பேருந்து இயக்கினால் உதவியாக இருக்கும். தற்சமயம் மருத்துவ வசதிக்குச் செல்ல வேண்டும் என்றால்கூட பல மைல்கள் சுற்றி சிதம்பரத்திற்கும் காட்டுமன்னார்குடிக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசுப் போக்குவரத்தை இயக்கினால் உதவியாக இருக்கும். அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் சார்பாக காட்டுமன்னார்கோயில் கிளை ஆரம்பிக்க கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அந்த முடிவு கைவிடப்படவில்லை. கொள்கையளவிலே முடிவு செய்யப்பட்டு அதற்குப் போதிய நிதியாதாரமும், நிலமும் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் அந்தப் பணி சற்று காலதாமதமாகி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கிளை ஆரம்பிப்பதற்கு நிலம் கிடைப்பதற்கும் அந்த நிலம் கையகப்படுத்தப்படுவதற்கும், அங்கே ஏதேனும் முயற்சி எடுத்தால் அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய வழித்தடத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்டிருக்கிற அந்தக் கிராமத்தினுடைய வழித்தடங்களில் சாலை வசதி போதுமானதாக இல்லை. அது குறுகிய சாலை என்பதாலும், போக்குவரத்திற்குத் தகுதியற்றது என்பதாலும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் N.O.C. கொடுக்கவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலையை அகலப்படுத்துகின்ற பணியும், மேம்படுத்துகின்ற பணியும் நடைபெற்று வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சாலை வேலை முழுமையாக முடிந்தவுடன், அந்த வழித்தடத்திலே அரசுப் பேருந்துகள் இயக்குவதற்கு வேண்டிய வழிவகைகளைப் பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 151, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.